1993 அக்டோபர் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

(எ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993 ஆம் ஆண்டு தமிழ் நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்யும் அருகதையை எனக்குத் தந்த இதயதெய்வம் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆசியை உங்கள் மூலம் கோரிக்கொண்டு,

"1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

7. அரசினர் தீர்மானம்.

(அ) பேரவை விதி 33—ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 33—ஐத் தளர்த்தி, இப்பேரவை இன்று அரசினர் அலுவல்களை எடுத்துக்கொள்ள வேண்டும்''.
என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

8. அரசினர் சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

(அ) அடகு பிடிப்போர் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு அடகு பிடிப்போர் (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1993). மாண்புமிகு சட்ட அமைச்சர்.